




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மூலம், மாவட்ட அளவில் சிறிய ஜவுளிப்பூங்கா அமைப்பது தொடர்பான தொழில் முனைவோர்களுடன் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (29.06.2016) நடைபெற்றது. கைத்தறி மற்றும் துணிநூல் துறை உதவி இயக்குநர் திரு. என்.சுந்தராஜ் (நாகர்கோவில்), கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை மேலாண்மை இயக்குநர் திரு. கா.இரா. ஜெயவேல் கணேசன் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 410/2016 நாள்: 29.06.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப.,**
**அவர்கள் தலைமையில்,**
**மாவட்ட அளவில் சிறிய ஜவுளிப்பூங்கா அமைப்பது தொடர்பாக**
**தொழில் முனைவோர்களுடன் ஆலோசனைக்கூட்டம்**
**இன்று (29.06.2016) நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மூலம், மாவட்ட அளவில் சிறிய ஜவுளிப்பூங்கா அமைப்பது தொடர்பாக தொழில் முனைவோர்களுடன் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (29.06.2016) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 01.09.2015 அன்று நடைபெற்ற சட்டப்பேரவை கூட்டத்தில், 110 விதியின் கீழ், கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மூலம், ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டத்தின் கீழ் (அரசாணை (நிலை) எண். 195/ கைத்தறி/ கைவினை/ துணிநூல் மற்றும் கதர்த் (சி2) துறை/நாள் 30.12.2015) தமிழ்நாட்டிற்கு 14 ஜவுளி பூங்காக்கள் ரூ. 983 கோடியே 41 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு ரூ. 2 கோடியே 50 இலட்சம் வரை நிதி உதவி தமிழக அரசால் வழங்கப்படும். எனவே தொழில் முனைவோர்கள் மாவட்ட அளவில் சிறிய ஜவுளி பூங்காக்கள் அமைத்து, தொழிலில் வளர்ச்சியடைய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அரசின் மான்யத்துடன் அமைக்கப்படும் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் கீழ்கண்ட உட்கட்டமைப்பு வசதிகளை கொண்டதாக இருத்தல் வெண்டும்.

1) நிலம்
2) உட்டகட்டமைப்பு வசதிகள் (சாலைவசதி/சுற்றுச்சுவர்/கழிவுநீர் வாய்க்கால் அமைத்தல்/ நீர் விநியோகம்/ தெரு விளக்கு அமைத்தல்/ மின்சார வசதி (including captive power plant) மற்றும் கழிவுநீரை சுத்திகரிக்கும் நிலையம் தொலைதொடர்பு வசதி போன்றவைகள்)
3) ஆய்வுக்கூடம்/ வடிவமைப்பு மையம்/ பயிற்சி மையம்/ வியாபார மையம்/ கிடங்கு வசதி/ மூலப்பொருட்கள் மையம்/ குழந்தைகள் காப்பகம்/ உணவகம்/ பணியாளர்கள் விடுதி/ அலுவலகம் மற்றும் இதர இனங்கள்.
4) உற்பத்தி தொடர்பான தொழிற்கூடங்கள்
5) இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள்

சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க முன் வரும் தொழில் முனைவோர்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மாநில அரசு மானியம் வழங்கப்படும்.

1) ஒவ்வொரு சிறிய ஜவுளிப் பூங்காவும் ஒரு சிறப்பு நோக்க முகமையினை (Special Purpose Vehicle) பதிவு செய்திருக்க வேண்டும்.
2) முதலீட்டாளர்கள் சிறப்பு நோக்க முகமையில் அங்கம் வகிக்கவும் அதற்கான தனது பங்கினை அளிக்கவும் எழுத்து மூலமாக விருப்பம் தெரிவித்தல் வேண்டும்.
3) இவ்வாறு அமையவுள்ள ஜவுளிப் பூங்கா குறைந்த பட்சம் 10 தொழிற்கூடங்களுடன் குறைந்தபட்சமாக 10 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட வேண்டும்.
4) நிலமானது சிறப்பு நோக்க முகமை பெயரில் பதிவு செய்திருக்க வெண்டும்.
5) நிலம்/ தொழிற்சாலை கட்டிடம்/ இயந்திரம் மற்றும் தளவாடங்களுக்கு செய்யப்படும் முதலீடானது உட்கட்டமைப்பு வசதிக்கு செலவிடப்படும் முதலீட்டை விட இரண்டு மடங்கு அதிகமாக இருத்தல் வெண்டும்.
6) சிறப்பு நோக்க முகமையில் (SPV) அரசின் பிரதிநிதி ஒருவர் இடம்பெற்றிருக்க வேண்டும்.
7) பூங்காவின் பெயரில் தேசிய வங்கியில் கணக்கு (escrow account) தொடங்கப்பட்டிருக்க வேண்டும்.
8) மேற்காணும் மானியம் மூன்று தவணைகளில் விடுவிக்கப்படும்.
9) மேலும் சிறப்பு நோக்க முகமை (SPV) ஒவ்வொரு முறையும் மானியம் விடுவிக்க கோரிக்கை சமர்ப்பிக்கும் போது தொடர்புடைய ஆவணங்கள்/ இரசீதுகள்/ ஒப்பந்த பத்திரங்கள் உடன் சமர்ப்பிக்க வெண்டும்.
10) மாநில அரசு விடுவிக்கும் மானியத்திற்கு சிறப்பு நோக்க முகமை தனியான கணக்கினை மேற்கொள்ள வெண்டும். இக்கணக்கானது அரசின் தணிக்கைத் துறையினரால் தணிக்கை செய்யப்படும்.
11) திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படும் ஜவுளிப்பூங்காவின் முன்னேற்றம் குறித்து கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் தொடர்ந்து கண்காணித்து வருவார்.
12) திட்டப் பணியினை முடிக்கும் முன்பே திட்டப் பணியிலிருந்து எந்த சிறப்பு நோக்க முகமை (SPV) யாவது விலக நேரிடின் அந்த காலகட்டம் வரை பெற்ற மாநில அரசு மானியத்தை அதற்கான வட்டியுடன் திரும்பச் செலுத்த வேண்டும். வட்டி சதவிகிதத்தை திட்ட அங்கீகாரக் குழு நிர்ணயிக்கும் என தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை உதவி இயக்குநர் திரு. என்.சுந்தராஜ் (நாகர்கோவில்), கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை மேலாண்மை இயக்குநர் திரு. கா.இரா. ஜெயவேல் கணேசன் மற்றும் தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.